

கழக இளைஞர் அணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழா மற்றும் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, சேலம் கிழக்கு மாவட்டப் பொருளாளர் ஆர்.வி.ஸ்ரீராம் ஏற்பாட்டில், ஆத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கிளை செயலாளர்கள், வார்டு செயலாளர்கள், தேர்தல் பொறுப்பாளர்கள், வாக்குச்சாவடி முகவர்கள், சார்பு அணி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் உள்ளிட்டவர்களுக்கு கிழக்கு மாவட்ட செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி., தலைமை தாங்கி அனைவருக்கும் கேஸ் அடுப்பு வழங்கினார்

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில்

# தி.மு.க. மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம்!

## பொதுச்செயலாளர் துரைமுருகன் அறிவிப்பு!

கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தலைமையில் **“தி.மு.க. மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம்”** 20.01.2026 செவ்வாய்க்கிழமை மாலை 6.30 மணி அளவில், சென்னை, அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் நடைபெறும்.

அதுபோது மாவட்டக் கழகச் செயலாளர்கள் மற்றும் கழக நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**பொருள் : 2026 சட்டப்பேரவைத் தேர்தல்**

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை – 18



**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.



# தி.மு.க.
# இளைஞர் அணி

## மாவட்ட சமூக வலைதள துணை அமைப்பாளர்கள் நியமனம்

## இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு!

*கழகத் தலைவர்–மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்பேரில் தலைமைக் கழகத்தின் ஒப்புதலுடன், கழக இளைஞர் அணி நிர்வாகிகளுக்கு, சமூக வலைதளப் பயிற்சியளிக்கவும், அவர்களின் சமூக வலைதளம் சார்ந்த பணிகளை ஒருங்கிணைக்கவும், கழக மாவட்டத்துக்கு ஒருவர் என அனைத்து மாவட்டங்களிலும் துணை அமைப்பாளர்கள் நியமிக்கப்பட்டு வருகின்றனர்.*

*இந்தப் பொறுப்புகளுக்கு தமிழ்நாடு முழுவதும் இருந்து 1,450–க்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் பெறப்பட்ட நிலையில், அவர்களை நேரில் அழைத்து, இதுவரை ஆற்றிய களப்பணிகள் மற்றும் சமூக வலைதளப் பணிகளை ஆய்வு செய்தோம். அவற்றின் அடிப்படையிலும், மாவட்டக் கழகச் செயலாளர்களின் பரிந்துரையின் பேரிலும் இவர்கள் தேர்வுசெய்யப்படுகின்றனர்.*


*அந்த வகையில், இளைஞர் அணி மண்டலம்–8–க்கு உட்பட்ட கழக மாவட்டங்களுக்குப் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள சமூக வலைதள துணை அமைப்பாளர்களின் விவரம் வருமாறு:*

| வ. எண் | மாவட்டம் | துணை அமைப்பாளர் (சமூக வலைதளம்) |
|---|---|---|
| 1 | தேனி வடக்கு | பா.விஜயகுமார், 30–அ, பள்ளிவாசல் அருகில், சர்ச் தெரு, முத்துத்தேவன்பட்டி, வீரபாண்டி, தேனி மாவட்டம். |
| 2 | தேனி தெற்கு | சி.கே.இரவிக்குமார், வார்டு - 2, வேத கோவில் தெரு, குள்ளப்பகவுண்டன்பட்டி (அஞ்சல்), உத்தமபாளையம் வட்டம், தேனி மாவட்டம். |
| 3 | விருதுநகர் வடக்கு | ம.ஆறுமுகம், 4/702, கட்டாலங்குளம், எஸ்.மறைக்குளம் அஞ்சல், திருச்சுழி வட்டம், விருதுநகர் மாவட்டம். |
| 4 | விருதுநகர் தெற்கு | சோ.ஆனந்தகுமார், 287, மாரியம்மன் கோயில் தெரு, திருவில்லிப்புத்தூர் - 626125. |
| 5 | இராமநாதபுரம் | சா.ரசாக், 6/43, அமீர் நகர், வன்னிக்குடி, புத்தேந்தல் அஞ்சல், இராமநாதபுரம் மாவட்டம் - 623502. |
| 6 | சிவகங்கை | மு.வீரஈஸ்வரன், 245, கோட்டையிருப்பு அஞ்சல், திருப்பத்தூர் வட்டம், சிவகங்கை மாவட்டம். |
| 7 | தென்காசி வடக்கு | இரா.அருள் ஜோதி பாபா 51, நரசிங்கபெருமாள் கோவில் தெரு, புளியங்குடி - 627855. |
| 8 | தென்காசி தெற்கு | பீ.செய்யது பாட்ஷா, 2/52, பள்ளிவாசல் தெரு, முத்தம்மால்புரம், வி.கே.புதூர் வட்டம், தென்காசி - 62791 |

**அன்பகம்**
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 14.01.2026

கலைஞர் 100 1924 - 2023

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி



நாகை மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் நாகையில் மாவட்ட தி.மு.க. அலுவலகமான தளபதி அறிவாலயத்தில் கலைஞர் அரங்கில் நடைபெற்றது. கூட்டத்தில் நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக தலைவருமான என்.கௌதமன் பேசினார். உடன் முன்னாள் அமைச்சர் உ.மதிவாணன், மாவட்டக் கழக அவைத்தலைவர் ப.செல்வம், தொகுதி பார்வையாளர்கள் ஆர்.அருள்செல்வம், இரா.சங்கர், வி.ஜெயபிரகாஷ், மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் ஜி. மனோகரன் ஆகியோர் உள்ளனர்.

## சேலம் மேற்கு மாவட்டத்தில் திராவிடப் பொங்கல் – சமூக நீதி திருவிழா!

# ஒன்றிய, நகர, மாவட்ட அளவில் விளையாட்டுப் போட்டிகள்! பரிசுத் தொகை ரூ.22 இலட்சம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் டி.எம்.செல்வகணபதி எம்.பி. வழங்கினார்!

சேலம், ஜன. 18–

திராவிட பொங்கல் – சமூக நீதிகான திருவிழா கொண்டாட்டம் 31.12.2025 அன்று உடன்பிறப்புகளுக்கு எழுதியுள்ள கடிதத்தில் கழகத்தலைவர் – முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி தமிழர் திருநாளான பொங்கல் திருவிழாவை முன்னிட்டு சேலம் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் ஜனவரி 03 முதல் ஜனவரி 09 வரை ஒன்றிய, நகர அளவிலும், ஜனவரி 10 முதல் ஜனவரி 13 வரை மாவட்ட அளவில் நடைபெற்ற போட்டியில் பங்கு பெறும் அணிகளுக்கு டிஷர்ட் மற்றும் விளையாட்டு உபகரனங்கள் வழங்கப்பட்டன.



ஒன்றிய, நகர, மாவட்ட அளவில் நடந்த விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்ற அனைத்து அணிகளுக்கும் பரிசு தொகை ரூ.22,07,000/ மற்றும் சுழற்கோப்பைகளை, ஜனவரி 13 மாலை 6.00 மணி அளவில் எடப்பாடி நகரம், நைனாம்பட்டியில் சேலம் மேற்கு மாவட்டக் கழக செயலாளர், சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.செல்வகணபதி எம்.பி. வழங்கி சிறப்புரை யாற்றினார். ஆண்கள் பிரிவில் 6632 வீரர்களும், பெண்கள் பிரிவில் 2280 வீராங்கனைகளும் மொத்தம் 8912 வீரர்வீராங்கனை கள் கலந்துகொண்டனர்.

ஒன்றிய, நகர அளவில் கிரிக்கொட், ஆண்களுக்கான கபடி, பெண்களுக்கான கபடி, ஆண்களுக்கான வாலிபால், பெண்களுக்காக வாலிபால், ஆண்களுக்கான கோ.கோ, பெண்களுக்கான கோ.கோ, ஆண்களுக்கான இறகுபந்து, பெண்களுக்கான இறகுபந்து, ஆண்களுக்கான சதுரங்கபோட்டி, பெண்களுக்கான சதுரங்கபோட்டி, பள்ளி, கல்லூரி மாணவிகளுக்கு ஓட்டப்பந்தையம், பெண்களுக்கான த்ரோபால், பெண்களுக்கான மிதிவண்டி, ஆண்பெண் இருபாலருக்குமான சிலப்பாட்டம் ஆகிய விளையாட்டு போட்டிகள் நடைபெற்றது.

மாவட்ட அளவில் வெற்றி பெற்ற அணிகளுக்கு பரிசுகளின் விபரம், கிரிக்கெட் போட்டியில் முதல் பரிசு ரூ. 25,000/ கில்லர் பாய்ஸ் இடங்கணசாலை, இரண்டாம் பரிசு ரூ. 20,000/ வீரக்கல் தி.மு.க, நங்கவள்ளி, மூன்றாம் பரிசு ரூ. 15,000/ 7 பேர்ட்ஸ் ஆலச்சம்பாளையம், எடப்பாடி, கபடி ஆண்கள் பிரிவில் முதல் பரிசு ரூ. 20,000/ 7 லென்ஸ், கொங்கணாபுரம், இரண்டாம் பரிசு ரூ. 15,000/ சித்தன் நினைவுகுழு, இடங்கணசாலை, மூன்றாம் பரிசு ரூ.10,000/ அண்ணை சத்தியா, மகுடஞ்சாவடி, கபடி பெண்கள் பிரிவில் முதல் பரிசு ரூ. 15,000/ இளந்தென்றல், சங்ககிரி, இரண்டாம் பரிசு ரூ. 10,000/ முகமதுஅலி விளையாட்டு சுடம், மேட்டூர், மூன்றாம் பரிசு ரூ. 7000/ சித்தன் நினைவுகுழு, இடங்கணசாலை, வாலிபால் போட்டியில் ஆண்கள் பிரிவில் முதல் பரிசு ரூ. 20,000/ நத்தை பாய்ஸ், தாரமங்கலம், இரண்டாம் பரிசு ரூ. 15,000/ பெரியசோரகை அணி, நங்கவள்ளி, மூன்றாம் பரிசு ரூ. 10,000/ கே.வி.சி. இருப்பாளி, எடப்பாடி, வாலிபால் பெண்கள் பிரிவில் முதல் பரிசு ரூ.12,000/ அரசு மேல்நிலைப் பள்ளி, இடங்கணசாலை, இரண்டாம் பரிசு ரூ. 10,000/ அரசு மேல்நிலைப் பள்ளி, செட்டிமாங்குறிச்சி, இறகுபந்து ஆண்களுக்கான பிரிவில் முதல் பரிசு ரூ. 20,000/ விக்னேஷ் சியாம், சங்ககிரி நகரம், இரண்டாம் பரிசு ரூ. 15,000/ நவீன் இளவரசன், எடப்பாடி நகரம், மூன்றாம் பரிசு ரூ. 10,000/ நவீன், மனோஜ், மேட்டூர் நகரம், இறகுபந்து பெண்கள் பிரிவில் முதல் பரிசு ரூ.10,000/ லக்ஷனா, மிதுலா, கொளத்தூர், இரண்டாம் பரிசு ரூ. 5,000/ காவியா, ஓவியா, மேட்டூர், கோ.கோ ஆண்கள் பிரிவில் முதல் பரிசு ரூ.20,000/ கே.கே.நகர் பாய்ஸ், இடங்கணசாலை, இரண்டாம் பரிசு ரூ.15,000/ டி.கே.இ.சி, மேச்சேரி, கோ.கோ. பெண்கள் பிரிவில் முதல் பரிசு ரூ.12,000/ அரசு மேல்நிலைப் பள்ளி, தேவூர், இரண்டாம் பரிசு ரூ.10,000/ அரசு மேல்நிலைப் பள்ளி, இடங்கணசாலை, மூன்றாம் பரிசு ரூ.7,000/ அரசு மேல்நிலைப் பள்ளி, பூலாம்பட்டி, ஆண்களுக்கான சதுரங்க போட்டி முதல் பரிசு ரூ. 10,000/ சு.வேலுசாமி, கொங்கணாபுரம், இரண்டாம் பரிசு ரூ. 7,000/ மு.விமல், சங்ககிரி நகரம், மூன்றாம் பரிசு ரூ. 5,000/ பி.ஆதித்யேஷா, மேட்டூர், சதுரங்கம் பெண்கள் பிரிவில் முதல் பரிசு ரூ. 7,000/ அ.சௌந்தர்யா, கொங்கணாபுரம், இரண்டாம் பரிசு ரூ. 5000/ நா.யோக பிரியா, தாரமங்கலம், மூன்றாம் பரிசு ரூ. 3,000/ கு.ரா.தேஜஸ்வினி, மேட்டூர் நகரம், கல்லூரி மாணவிகளுக்கான 400 மீட்டர் ஓட்டப்பந்தையம் முதல் பரிசு ரூ.15,000/ எம்.கௌரி, சக்தி கைலாஷ் கல்லூரி, நங்கவள்ளி, இரண்டாம் பரிசு ரூ. 10,000/ எஸ். வைத்தீஸ்வரி, சக்திகைலாஷ் கல்லூரி, நங்கவள்ளி, மூன்றாம் பரிசு ரூ.5,000/ கே.ஹேம தர்ஷினி, சக்தி கைலாஷ் கல்லூரி, நங்கவள்ளி, பள்ளி மாணவிகளுக்கான 400 மீட்டர் ஓட்டப்பந்தையம் முதல் பரிசு ரூ.12,000/ பி.தனுஸ்ரீ, தாரமங்கலம், இரண்டாம் பரிசு ரூ.10,000/ கே. கௌசல்யா, தாரமங்கலம், மூன்றாம் பரிசு ரூ.5,000/ ஆர்.எஸ். சுஜிதா, நங்கவள்ளி, பெண்களுக்கான த்ரோபால் முதல் பரிசு ரூ. 12,000/ காவேரி நர்சிங் கல்லூரி, இரண்டாம் பரிசு ரூ. 10,000/ காவேரி பிசியோதெரபி கல்லூரி, மூன்றாம் பரிசு ரூ.7,000/ காவேரி பொறியியல் கல்லூரி, பெண்களுக்கான மிதிவண்டி போட்டியில் முதல் பரிசு ரூ.10,000/ ஜி.சன்மதி, தாரமங்கலம், இரண்டாம் பரிசு ரூ. 7,000/ பி.மித்ரா, சங்ககிரி, மூன்றாம் பரிசு ரூ. 5,000/ எம்.சோபனா, மகுடஞ்சாவடி, ஆண் பெண் இருபாலருக்குமான சிலம்பாட்ட போட்யில் முதல் பரிசு ரூ.15,000/ வி.பி.எஸ்.மணி, எடப்பாடி நகரம், இரண்டாம் பரிசு ரூ. 10,000/ பாரம்பரிய கலைச் சங்கம், ஜலகண்டாபுரம், மூன்றாம் பரிசு ரூ. 5,000/ கலாம் சிலம்பம், தாரமங்கலம் நகரம் ஆகிய வெற்றி பெற்ற அணிகளுக்கு பரிசுகள் மற்றும் சுழற் கோப்பை கள் வழங்கினார்.

சிலம்பாட்டத்தில் சிறப்பாக விளையாடிய ஜலகண்டாபுரத்தை சேர்ந்த பாரம்பரிய கலைச்சங்கம் வீராங்கனை செல்வி கே.இ.கோகிலா த/பெ இளங்கோ அவர்களுக்கு கைகடிகாரம் மற்றும் சுழற்கோப்பை வழங்கி, மேலும் அவர் B.E. (CSE) படிப்பிற்கான கல்லூரி கட்டணத்தை சேலம் மேற்கு மாவட்ட கழகம் ஏற்றுக்கொள்ளும் என்று அறிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் எடப்பாடி தொகுதி பார்வையாளர் நா.முருகவேல், மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள், கழக தோழர்கள் மற்றும் விளையாட்டு வீரர், வீராங்கனைகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# பிணைக் கூட்டணி



வழக்குகளையும் விசாரணை அமைப்புகளையும் காட்டி
தலைவர்களை
சிறைப்படுத்தி விட்டால்
அவர்களது தொண்டர்களும் பொதுமக்களும்
தங்களையே ஆதரிப்பார்கள் என நம்புகின்றனர்…

ஆனால்

கடத்திக்கிட்டு வந்திருக்காங்கன்னு
தெரிஞ்ச பிறகு
ஆசி கூறி யாரும்
அட்சதை போட
மாட்டார்கள்.. …

அது போலத்தான்

அரசியலிலும்
வற்புறுத்தி மிரட்டி உருவாக்கப்படும்
கட்டாயக் கூட்டணிக்கு
வாக்குகளும்
கிடைக்காது
மக்களிடம்
வரவேற்பும்
இருக்காது.

**என்னநாஞ் சொல்றது**



**மருது அழகுராஜ்**
கழக செய்தித் தொடர்புக் குழு
துணைத் தலைவர்